22. கோயில் திருப்பதிகம்

(அநுபோக இலக்கணம்)

திருத்தில்லையில் அருளியது

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

388. மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத் தமுதே
ஊறிநின் றென்னுள் எழுபரஞ்சோதி
உள்ளவா காணவந் தருளாய்
தேறலின் தெளிவே சிவபெரு மானே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த
இன்பமே என்னுடை அன்பே 1

389. அன்பினால் அடியேன் ஆவியோ டாக்கை
ஆனந்த மாய்க்கசிந் துருக
என்பரம் அல்லா இன்னருள் தந்தாய்
யான்இதற் கிலன்ஓர் கைம்மாறு
முன்புமாய்ப் பின்பும் முழுதுமாய்ப் பரந்த
முத்தனே முடிவிலா முதலே
தென்பெருந் துறையாய் சிவபெருமானே
சீருடைச் சிவபுரத் தரைசே 2

---

1. உள்ளவா காண - நிசசொருபத்தைத் தரிசிக்க. ஈறு இலாப் பதங்கள் - அளவற்ற உலகங்கள்.

2. என்பரம் அல்லா - எனது தரத்திற்கு விஞ்சிய,

390. அரைசனே அன்பர்க் கடியனே னுடைய
அப்பனே ஆவியோ டாக்கை
புரைபுரை கனியப் புகுந்துநின் றுருக்கிப்
பொய்யிருள் கடிந்தமெய்ச் சுடரே
திரைபொரா மன்னும் அமுதத்தெண் கடலே
திருப்பெருந் துறையுறை சிவனே
உரையுணர் விறந்துநின் றுணர்வதோர் உணர்வே
யானுன்னை உரைக்குமா றுணர்த்தே 3

391. உணர்ந்தமா முனிவர் உம்பரோ டொழிந்தார்
உணர்வுக்கும் தெரிவரும் பொருளே
இணங்கிலி எல்லா உயிர்கட்கும் உயிரே
எனைப்பிறப் பறுக்கும்எம் மருந்தே
திணிந்ததோர் இருளில் தெளிந்ததூ வெளியே
திருப்பெருந் துறையுறை சிவனே
குணங்கள்தா மில்லா இன்பமே உன்னைக்
குறுகினேற் கினியென்ன குறையே 4

392. குறைவிலா நிறைவே கோதிலா அமுதே
ஈறிலாக் கொழுஞ் சுடர்க் குன்றே
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென்
மனத்திடை மன்னிய மன்னே
சிறைபெறா நீர்போல் சிந்தைவாய்ப் பாயுந்
திருப்பெருந் துறையுறை சிவனே
இறைவனே நீயென் உடலிடங் கொண்டாய்
இனியுன்னை யென்னிரக் கேனே 5

---

3. புரை புரை கனிய - மயிர்க்கால் என்புத்துளை எங்கும் நெக்குருக. திரைபொரா மன்னும் - பெயராது நிலை பெற்று நிற்கும். ஒழிந்தார் - பிரமன் மால் முதலியோர்.
4. இணங்கிலி - இணையில்லாதவனே.
5. குறைவிலா நிறைவு - பரிபூரணப் பொருள். கோது - குற்றம். சிறை - அணை.

393. இரந்திரந் துருக என்மனத் துள்ளே
எழுகின்ற சோதியே இமையோர்
சிரந்தனிற் பொலியுங் கமலச்சே வடிவாய்
திருப்பெருந் துறையுறை சிவனே
நிரந்தஆ காயம் நீர்நிலம் தீகால்
ஆய்அவை அல்லையாய் ஆங்கே
கரந்ததோர் உருவே களித்தனன் உன்னைக்
கண்ணுறக் கண்டுகொண் டின்றே 6

394. இன்றெனக் கருளி இருள்கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலால் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றும்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்றும்நீ யல்லை அன்றியொன் றில்லை
யாருன்னை அறியகிற் பாரே 7

திருச்சிற்றம்பலம்

---

6 இரந்து இரந்து - தன்முனைப்பின்றி பலகாலும் வேண்டி வேண்டி. கால் - காற்று.

7, நினைப்பு அற - கருவிகளானும் தற்போதத்தினானும் உணருந் தன்மை இல்லையாக. சென்று சென்று பந்தங்களின் நின்றும் நீங்கி.

395. பார்பதம் அண்டம் அனைத்துமாய் முளைத்துப்
பரந்ததோர் படரொளிப் பரப்பே
நீருறு தீயே நினைவதேல் அரிய
நின்மலா நின்னருள் வெள்ளச்
சீருறு சிந்தை எழுந்ததோர் தேனே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாருற வெனக்கிங் கார்அய லுள்ளார்
ஆனந்த மாக்குமென் சோதீ 8

396. சோதியாய்த் தோன்றும் உருவமே அருவாம்
ஒருவனே சொல்லுதற் கரிய
ஆதியே நடுவே அந்தமே பந்தம்
அறுக்கும் ஆனந்தமா கடலே
தீதிலா நன்மைத் திருவருட் குன்றே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாதுநீ போவதோர் வகையெனக் கருளாய்
வந்துநின் இணையடி தந்தே 9

397. தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பால்
சிந்தையே கோயில் கொண்டஎம் பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய்
யான்இதற் கிலன்ஓர் கைம்மாறே 10

திருச்சிற்றம்பலம்

---

8. நீருறு தீ - சூடு பொருந்திய நீர். "எரியுறு நீர்" இனி கடல் நீரில் பொருந்திய வடவைத் தீ போன்றவன் எனினுமாம்.

10. சதுரர் - திறல் படைத்தவர் (சிந்தையினும் உடலினும் இடங்கொண்டவர் என்று கூட்டுக.)

பதப்பொருள் : (1)

தேறலின் தெளிவே - தேனின் தெளிவானவனே, சிவபெருமானே - சிவபிரானே, திருப்பெருந்துறையுறை சிவனே - திருப்பெருந்துறையில் வீற்றிருக்கின்ற சிவனே, ஈறு இலா - அளவில்லாத, பதங்கள் யாவையும் கடந்த - பதவிகள் எல்லாவற்றையுங்கடந்து நின்ற, இன்பமே - ஆனந்தமே, என்னுடை அன்பே - என்னுடைய அன்பு உருவமே, மாறி நின்று - பகைத்து நின்று, என்னை மயக்கிடும் - என்னை மயங்கச் செய்கின்ற, வஞ்சப்புலன் ஐந்தின் - வஞ்சனையைச் செய்கின்ற ஐம்புலன்களின், வழி அடைத்து - வாயில்களையும் அடைத்து, அமுதே ஊறி நின்று - அமுதமே சுரந்து நின்று, என் உள் எழு பரஞ்சோதி - என்னகத்தே தோன்றுகின்ற மேலான ஒளியே, உள்ள ஆ காண - உன்னை யான் உள்ளவாறு காணும்படி, வந்தருளாய் - வந்தருள்வாயாக.

விளக்கம் :

இந்திரன், பிரமன், திருமால், முதலாக உள்ள எண்ணற்ற தேவர்களுக்கும் உரிய எண்ணற்ற பதவிகள் அனைத்திற்கும் அப்பாற்பட்டவன் சிவபெருமானாதலின், 'ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த' என்றும், இவர்கள் எல்லோருடைய இன்பங்களினும் மேலான இன்பவடிவினன் அப்பெருமானாதலின், 'இன்பமே' என்றும், அன்பே சிவமாதலின், 'அன்பே' என்றும் கூறினார். மாறி நின்று மயக்குதலாவது, செல்லுகின்ற நன்னெறியில் செல்லவிடாமற்செய்தலாம். புலன்கள் அறிவைத் தம் வழியே ஈர்க்கும் தன்மையுடையவாதலின், 'மயக்கும் வஞ்சப்புலன்' என்றும், அவை அவ்வாறு ஈர்ப்பது, ஐம்பொறிகள் வழியாகவேயாதலின், 'வழி' என்றும், இறைவன் இன்பம் உள்ளேயிருந்து ஊறி எழும்பொழுது, அவ்வைம்பொறிகளும் செயலற்று ஒழிதலால், 'அடைத்து அமுதே ஊறி நின்று' என்றும் கூறினார். இறைவனை அகத்தே கண்டு இன்புற்றவர் புறத்தேயும் கண்டு களிக்க விழைந்து, 'உள்ளவா காண வந்தருளாய்' என்றார்.

இதனால், இறைவனை அகத்திற்காண்பது போலவே புறத்திலும் காணுதல் வேண்டும் என்பது கூறப்பட்டது.

பதப்பொருள் : (2)

முன்புமாய் - எல்லாவற்றிற்கும் முன்னுமாய், பின்பும் - பின்னுமாய், முழுதுமாய் - முழுதுமாய், பரந்த - வியாபித்த, முத்தனே - மலமற்றவனே, முடிவு இலா - எல்லையற்ற, முதலே - பரம்பொருளே, தென்பெருந்துறையாய் - அழகிய திருப்பெருந்துறையையுடையவனே, சிவபெருமானே - சிவபிரானே, சீர் உடை சிவபுரத்து அரைசே - சிறப்புப் பொருந்திய சிவபுரத்துக்கு அரசனே, அன்பினால் - அன்பின் மிகுதியால், அடியேன் - அடியேனது, ஆவியோடு - உயிரோடு, ஆக்கை - உடம்பும், ஆனந்தமாய்க் கசிந்து உருக - இன்பவெள்ளமாய்க் கசிந்து உருகும்படி, என் பரம் அல்லா - என் நிலைக்குத் தகுதியில்லாத, இன் அருள் தந்தாய் - இனிய அருளைப் புரிந்தாய், இதற்கு - இந்தப் பேருதவிக்கு, யான் ஓர் கைம்மாறு இலன் - யான் உனக்குத் திரும்பச் செய்யக்கூடிய உதவி இல்லாதவனாயிருக்கிறேன்.

விளக்கம் : இறைவன் எல்லா இடங்களிலும் வியாபகமாய்ப் பரவி இருக்கிறான் என்பார், 'முன்புமாய்ப் பின்பும் முழுதுமாய்ப் பரந்த முத்தனே' என்றார். இனி, எல்லாக் காலங்களிலும் இருக்கிறான் என்பார், 'முடிவிலா முதலே' என்றார். 'ஆவியோ டாக்கை ஆனந்த மாய்க்கசிந் துருக' என்றது, உள்ளக்கனிவோடு உடல் நெகிழ்ச்சியும் உண்டாதலைக் குறித்தபடி.

ஒப்புயர்வில்லாத பெரியோனாகிய இறைவனுக்குச் சிற்றுயிர்கள் என்ன செய்ய இயலும் என்பார், 'யானிதற் சிலனொர் கைம்மாறு' என்றார்.

இதனால், இறைவன் கைம்மாறு கருதாத கருணையாளன் என்பது கூறப்பட்டது.

பதப்பொருள் : (3)

அன்பர்க்கு அரைசனே - அடியார்களுக்கு இறைவனே, அடியனேனுடைய அப்பனே - அடியேனுடைய தந்தையே, ஆவியோடு ஆக்கை - உயிரோடு உடம்பும், புரைபுரை கனிய - அடுக்குத்தோறும் நெகிழ்ச்சியுண்டாகும்படி, புகுந்து நின்று உருக்கி - உள்ளத்தே புகுந்து நின்று உருகச்செய்து, பொய் இருள் கடிந்த - பொய்யாகிய அஞ்ஞானத்தைப் போக்கிய, மெய்ச்சுடரே - உண்மை ஞானமே, திரை பொரா - அலை மோதாது, மன்னும் - நிலையான, அமுதத் தெண்கடலே - அமுதமாகிய தெளிந்த கடலே, திருப்பெருந்துறையுறை சிவனே - திருப்பெருந்துறையில் வீற்றிருக்கும் சிவபெருமானே, உரை உணர்வு - வாக்கும் மனமும், இறந்து நின்று - கடந்து நின்று, உணர்வதோர் உணர்வே - திருவருளால் உணரும்படியான உணர்ச்சிப்பொருளே, யான் - நான், உன்னை உரைக்குமாறு - உன்னைப் புகழ்ந்து உரைக்கின்ற வழியை, உணர்த்தே - உணர்த்துவாயாக.

விளக்கம் :

'புரைபுரை' என்றது, உடம்பின் கண்ணுள்ள எழுவகைத் தாதுக்களையும், ஒளியின் முன் இருள் விலகுவது போல அறிவின் முன் அறியாமை விலகுமாதலின், அவ்வறியாமையைப் பொய்யென்றும், அறிவை மெய்யென்றுங்கூறினார். பொய்யாவது, நிலையாமை. மெய்யாவது, நிலைத்தல். 'வாக்கு' என்பது பாசஞானமும், 'மனம்' என்பது பசுஞானமும் ஆகும். அவற்றைக் கடந்து நின்று அறிதலாவது, திருவருள்வழி நின்று அறிதலாம்.
இதனால், இறைவன் வாக்கு மனாதீதன் என்பது கூறப்பட்டது.

பதப்பொருள் : (4)

உணர்ந்த - கற்று உணர்ந்த, மாமுனிவர் - பெரிய முனிவரும், உம்பரோடு - தேவருடன், ஒழிந்தார் - ஏனையோரது, உணர்வுக்கும் - உணர்ச்சிக்கும், தெரிவு அரும் பொருளே - உணர்வதற்கு அருமையான பொருளே, இணங்கு இலி - ஒப்பில்லாதவனே, எல்லா உயிர்கட்கும் உயிரே - எல்லா உயிர்களுக்கும் உயிரானவனே, எனை - என்னை, பிறப்பு அறுக்கும் - பிறவிப் பிணியைப் போக்கி உய்விக்கின்ற, எம் மருந்தே - எங்களது மருந்து போன்றவனே, திணிந்ததோர் இருளில் - செறிந்த இருளில், தெளிந்த தூவெளியே - தெளிவாய்க் காணப்பட்ட தூய ஒளியே, திருப்பெருந்துறையுறை சிவனே - திருப்பெருந்துறையில் வீற்றிருக்கின்ற சிவபெருமானே, குணங்கள்தாம் இல்லா - குணங்கள் இல்லாத, இன்பமே - ஆனந்தமே, உன்னைக் குறுகினேற்கு - உன்னையடைந்த எனக்கு, இனி என்ன குறை - இனி என்ன குறையுள்ளது?

விளக்கம் :

இருள், அறியாமை. அறிவு, ஒளி. இருளில் உள்ள உயிர்களுக்கு இறைவன் அவ்விருளை நீக்குகின்ற ஒளியாய் வெளிப்படுகின்றான் என்பார், 'திணிந்ததோர் இருளில் தெளிந்த

தூவெளியே' என்றார். மாயா குணத்தால் வரும் இன்பம் போலத் துன்பத்தோடு கூடியது அன்று இறைவன் இன்பம் ஆதலின், 'குணங்கள்தா மில்லா இன்பமே' என்றார். மாயா குணங்கள் மூன்று; அவை சத்துவம், இராசதம், தாமசம் என்பன. அவற்றுள் சத்துவத்தால் இன்பமும், இராசதத்தால் துன்பமும் உண்டாகுமாதலால், அவ்வின்பம் துன்பத்தொடு கூடி நிற்பதாகும். இறைவன் அம்முக்குணங்களும் இல்லாதவனாகலின், அவனது இன்பம் என்றும் இன்பமேயாம். இத்தகைய இன்பத்தை அடைந்த பின்னர், அடைய வேண்டுவது ஒன்றும் இல்லை என்பார், 'உன்னைக் குறுகினேற் கினியென்ன குறையே' என்று தம் நிலையை எண்ணிப் பெருமிதங்கொள்கின்றார்.

இதனால், இறைவன் முக்குணங்களுக்கும் அப்பாற்பட்டவன் என்பது கூறப்பட்டது.

பதப்பொருள் : (5)

குறைவு இலா நிறைவே - யாதொரு குறைவுமில்லாத நிறைவையுடைய பொருளே, கோதிலா அமுதே - குற்றமற்ற அமுதே, ஈறு இலா - முடிவில்லாத, கொழுஞ்சுடர்க் குன்றே - செழிப்பான ஒளி மலையே, மறையுமாய் - வேதமாகியும், மறையின் பொருளுமாய் - வேதத்தின் பொருளாகியும், என் மனத்திடை வந்து - என்னுடைய மனத்தின்கண் வந்து, மன்னிய - நிலைபெற்ற, மன்னே - தலைவனே, சிறை பெறா நீர்போல் - கட்டுப்படுத்தப்படாத வெள்ளம் போல, சிந்தைவாய் - என் சித்தத்தின்கண், பாயும் - பாய்கின்ற, திருப்பெருந்துறையுறை சிவனே - திருப்பெருந்துறையில் வீற்றிருக்கின்ற சிவபெருமானே, இறைவனே - ஆன்ம நாதனே, நீ என் உடலிடம் கொண்டாய், - நீ இப்பிறவியிலேயே என் உடம்பையே கோயிலாகக் கொண்டாய், இனி உன்னை என் இரக்கேன் - இனிமேல் உன்னை யான் வேண்டிக்கொள்வது என்ன இருக்கிறது?

விளக்கம் :

'குறைவிலா நிறைவே' என்றதால், இறைவன் பரிபூரணமானவன் என்பதையும், 'கோதிலா அமுதே' என்றதால், தூய்மையானவன் என்பதையும் கூறினார். உள்ளம் உடலின்கண் உள்ளதாதலின், உள்ளத்தை இடமாகக்கொண்ட இறைவனை 'உடலிடங் கொண்டாய்' என்றார். "நிலாவாத புலாலுடம்பே புகுந்து நின்ற கற்பகமே" என்று திருநாவுக்கரசர் கூறியதையுங் காண்க. இறைவன் இவ்வாறு தங்கியிருப்பதைவிடப் பேறு என்ன உள்ளது? ஆதலின், 'இனியுன்னை யென்னிரக் கேனே' என்றார்.

**'புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா வுன்னடி என்மனத்தே
வழுவா திருக்க வரந்தர வேண்டும்இவ் வையகத்தே'
என்றுதானே வேண்டினார் திருநாவுக்கரசரும்.**

இதனால், இறைவன் தன் அடியார்களுடைய உள்ளத்தையும் உடலையும் இடமாகக் கொள்கின்றான் என்பது கூறப்பட்டது.

பதப்பொருள் : (6)

இரந்து இரந்து உருக - உன் திருவருளை இடைவிடாது வேண்டி உருகும் போது, என் மனத்துள்ளே - என்னுடைய மனத்தினுள்ளே, எழுகின்ற சோதியே - தோன்றுகின்ற ஒளியே, இமையோர் சிரந்தனில் பொலியும் - தேவர்கள் தலைமீது விளங்குகின்ற, கமலம் - தாமரை மலர் போன்ற, சேவடியாய் - திருவடியையுடையவனே, திருப்பெருந்துறையுறை சிவனே - திருப்பெருந்துறையில் வீற்றிருக்கின்ற சிவபெருமானே, நிரந்தர - எங்கும் நிறைந்த, ஆகாயம் - ஆகாசமும், நீர் - நீரும், நிலம் - பூமியும், தீ - நெருப்பும், கால் ஆய் - காற்றும் ஆகி, அவை அல்லையாய் - அவையல்லாதவனாய், ஆங்கே - அவ்வாறு, கரந்தது ஓர் உருவே - அருளாலன்றிக் காணப்படாத வடிவத்தையுடையவனே, இன்று - இப்பொழுது, உன்னை - உன்னை, கண்ணுறக் கண்டுகொண்டு - கண்ணாரக் கண்டு, களித்தனன் - பெருமகிழ்ச்சியடைந்தேன்.

விளக்கம் :

மனத்தை ஒருமைப்படுத்தி இறைவனையே எண்ணினால், அங்கே சோதியாய்த் தோன்றுவான் என்பார், 'இரந்திரந்துருக என் மனத்துள்ளே எழுகின்ற சோதியே' என்றார். அகத்தே காணப்பட்ட சோதி புறத்தையும் காட்டிசயளித்தது என்பார், 'களித்தனன் கண்ணுறக் கண்டுகொண்டு' என்றார். கண்டுகொண்டு என்பதில், கொண்டு, துணை வினை. இதனால், இறைவன், ஊன்றி உணர்வார் உள்ளத்தில் தோன்றும் சோதி வடிவானவன் என்பது கூறப்பட்டது.

பதப்பொருள் : (7)

நீ அலால் பிறிது இன்மை - உன்னையன்றி வேறு ஒரு பொருள் இல்லையாக, சென்று சென்று - பிற எல்லாப் பொருளையும் விட்டுவிட்டு, அணு அய்த் தேய்ந்து தேய்ந்து - அணுவளவாய்க் குறுகிக் குறுகி, ஒன்று ஆம் - கூட்டப்படுகின்ற, திருப்பெருந்துறையுறை சிவனே - திருப்பெருந்துறையில் வீற்றிருக்கின்ற பெருமானே, ஒன்றும் நீயல்லை - காணப்படுகின்ற ஒரு பொருளும் நீ அல்லை, அன்றி ஒன்று இல்லை - உன்னையல்லாது பிற பொருளும் இல்லை, யார் உன்னை அறியகிற்பார் - யாவர் உன்னை அறிய வல்லவர்; (எனினும்) இன்று - இப்பொழுது, எனக்கு அருளி - எனக்கு அருள் புரிந்து, இருள் கடிந்து - அறியாமை இருளைப் போக்கி, உள்ளத்து எழுகின்ற - மனத்தே தோன்றுகின்ற, ஞாயிறே போன்று நின்ற - சூரியனே போல வெளி வந்து நின்ற, நின் தன்மை - உன்னுடைய இயல்பை, நினைப்பு அற நினைந்தேன் - தற்போதத்தினாலே எதிரிட்டு நினையாமல் அருள் வழியிலே நின்று நினைந்தேன்.

விளக்கம் :

இறைவனைத் தவிர மற்று எல்லாப் பொருளும் நீக்கத் தக்கனவேயாதலின், 'நீயலால் பிறிது மற்றின்மை' என்றார். எல்லாப் பொருள்களையும் சிறிது சிறிதாக விடுத்துச் சென்ற உயிர், முடிவில் இறைவனை அடையுமாதலின், 'சென்று சென்றணுவாய்த் தேய்ந்து தேய்ந்தொன்றாம் சிவனே' என்றார். உலகில் உள்ள பொருள்களில் ஒரு பொருளும் அவன் அல்லனாகலின், 'ஒன்றும் நீயல்லை' என்றார். ஆனாலும், ஒரு பொருளும் அவன் இயக்கமின்றித் தொழிற்படாது ஆதலின், 'அன்றி ஒன்றில்லை' என்றார்.

இதனால், இறைவன் எல்லாப் பொருள்களையும் விட்டவர்களாலேயே அடையத் தக்கவன் என்பது கூறப்பட்டது.

பதப்பொருள் : (8)

பார் - பூமியும், பதம் - மேலே உள்ள பதங்களும், அண்டம் அனைத்துமாய் - இவற்றையுள்ளடக்கிய பல்வேறு அண்டமும் ஆகிய எல்லாப் பொருளுமாய், முளைத்து - தோன்றி, பரந்)தது ஓர் - விரிந்ததாகிய ஒரு, படர் ஒளிப்பரப்பே - படருகின்ற ஒளிப்பிழம்பே, நீர் உறு தீயே - நீரில் கலந்துள்ள நெருப்புப் போன்றவனே, நினைவதேல் அரிய - நினைப்பிற்கு அருமையான, நின்மலா - தூய பொருளே, நின் - உனது, அருள் வெள்ளம் - திருவருளாகிய வெள்ளம் பாய்கின்ற, சீர் உறு - சிறப்புப் பொருந்திய, சிந்தை - (அடியாரது) சித்தத்தில், எழுந்தது - உண்டாகியதாகிய, ஓர் தேனே - ஒப்பற்ற தேன் போன்றவனே, திருப்பெருந்துறையுறை சிவனே - திருப்பெருந்துறையில் வீற்றிருக்கும் சிவபொருமானே, ஆனந்தம் ஆக்கும் - எனக்கு இன்பத்தை உண்டாக்குகின்ற, என் சோதீ - என்னொளியுடைப் பொருளே, இங்கு - இவ்விடத்தில், உறவு யார் - உறவாயிருப்பவர் யார்? அயல் உள்ளார் ஆர் - அயலாய் இருப்பவர் யார்?

விளக்கம் :

சங்கார காலத்தில் இறைவனிடத்தில் ஒடுங்கியிருந்த பொருள்கள் படைப்புக் காலத்தில் மீளவும் தோன்ற, அவற்றில் அவன் நிறைந்து நின்றான் என்றார், 'பார்பதம் அண்டம் அனைத்துமாய் முளைத்துப் பரந்ததோர் ஒளியே' என்றார். நீரில் சூடு எங்கும் நிறைந்திருத்தல் போல, தோற்றிய பொருளில் வியாபகமாய்க் கலந்திருக்கிறான் என்பார், 'நீருறு தீயே' என்றார். அடிகளுக்கு இறைவனே எல்லாமாய் இருக்கும் பொழுது, உலகில் சிலர் உறவும், சிலர் அயலும் ஆகாமையால், 'யாருற வெனக்கிங் காரயலுள்ளார்' என்றார்.
இதனால், இறைவன் அடியார்களுக்கு உறவும் பகையும் இல்லை என்று கூறப்பட்டது.

பதப்பொருள் : (9)

சோதியாய்த் தோன்றும் உருவமே - ஒளியாய்த் தோன்றும் உருவமே, அரு ஆம் ஒருவனே - உருவமில்லாத ஒப்பற்றவனே, சொல்லுதற்கு அரிய - வாக்கினால் சொல்லுவதற்கு அருமையான, ஆதியே நடுவே அந்தமே - எப்பொருட்கும் முதலும் இடையும் கடையுமாயுள்ளவனே, பந்தம் அறுக்கும் - பிறவித் தளையை ஒழிக்கின்ற, ஆனந்த மா கடலே - பேரின்பப் பெருங்கடலே, தீது இலா நன்மை - தீமையே கலவாத நன்மையேயுடைய, திரு அருள் குன்றே - திருவருள் மலையே, திருப்பெருந்துறையுறை சிவனே - திருப்பெருந்துறையில் வீற்றிருக்கும் சிவபெருமானே, வந்து - குருவாய் எழுந்தருளி வந்து, நின் இணை அடி தந்து - உன் இரு திருவடியை எனக்கு அருளிய பின், நீ போவது ஓர் வகை யாது - நீ என்னை விட்டுப் போகின்ற வகை எங்ஙனம், எனக்கு அருளாய் - அதை எனக்குச் சொல்வாயாக.

விளக்கம் :

இறைவன் ஆனந்தமாய் இருந்து துன்பத்தைப் போக்குகின்றானாதலின், 'பந்தம் அறுக்கும் ஆனந்தமா கடலே' என்றார். இன்பம் அளவற்றது என்பதைக் குறிப்பிட, 'கடலே' என்றார். தீதில்லா நன்மையாவது, ஏனைய உலக நன்மையைப் போலத் தீமை கலவாத நன்மை. அது இன்பத்தைத் தருவது போலக் காட்டித் துன்பத்தையே தரும்

என்க. ஆட்கொண்டபின் விட்டுச் செல்ல முடியாதாதலின், 'யாது நீ போவதோர் வகையெனக் கருளாய்' என்றார்.

இதனால், திருவருள் இன்பம் நிலையானது என்பது கூறப்பட்டது.

பதப்பொருள் : (10)

சிந்தையே - எனது சித்தத்தையே, கோயில் கொண்ட - திருக்கோயிலாகக் கொண்டு எழுந்தருளிய, எம் பெருமான் - எமது தலைவனே, திருப்பெருந்துறையுறை சிவனே - திருப்பெருந்துறையில் வீற்றிருக்கும் சிவபெருமானே, எந்தையே - எம் தந்தையே, ஈசா - ஈசனே, உடலிடம் கொண்டாய் - எனது உடலை இடமாகக் கொண்டவனே, சங்கரா - சங்கரனே, தந்தது - எனக்கு நீ கொடுத்தது, உன் தன்னை - உன்னை, கொண்டது - அதற்கு ஈடாக நீ என்னிடம் ஏற்றுக்கொண்டது, என்றன்னை - என்னை, அந்தம் ஒன்று இல்லா ஆனந்தம் பெற்றேன் - (உன்னை நீ எனக்குத் தந்ததால்) யான் முடிவு சிறிதுமில்லாத பேரின்பத்தை அடைந்தேன், நீ என்பால் பெற்றது ஒன்று யாது - நீ என்னிடத்தினின்றும் அடைந்த பயன் என்ன? ஒன்றும் இல்லை. ஆகவே, சதுரர் ஆர் - இக்கொள்ளல் கொடுத்தல்களைச் செய்த நம் இருவருள் திறமையுடையவர் யார்? (நானே திறமையுடையவன்); இதற்கு - இவ்வுதவிக்கு, யான் ஓர் கைம்மாறு இலன் - நான் ஒரு பிரதியுபகாரமும் செய்ய முடியாதவனாயினேன்.

விளக்கம் :

உடல் இடம் கொள்ளுதலாவது, உள்ளம் வழியாக உடலிலும் வியாபித்திருத்தல். சித்தமிசை குடி கொண்ட அறிவுப் பொருள் உடல் முழுவதும் ஆனந்தத்தை நல்கிக்கொண்டிருக்கிறது என்க. பெருமான் தன்னைத் தந்து என்னைக் கொண்டது ஊதியமில்லா வாணிகமாயிற்று என்பதாம். இது நிந்தாஸ்துதி. கொல், ஓ - அசைகள்.

இதனால், இறைவனது கைம்மாறு கருதாத கருணை கூறப்பட்டது.

திருச்சிற்றம்பலம்



<u>தட்டச்சு மற்றும் ஆக்கம்:</u>

சு. அருண்குமார் எம்.ஏ., எம்.பி.ஏ., பி.எட்., எம்ஃபில்., என்.இ.டி.,

உதவி பேராசிரியர்

தமிழ் துறை.